**செ.வெ.எண்.36** **நாள்: 21.04.2022**

# பத்திரிக்கை செய்தி

கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கான பணியிடங்களை நிரப்புவதற்கு நேர்காணல் தேர்வு தூத்துக்குடி மண்டலத்தில் 25.04.2022 முதல் 02.05.2022 வரை (ஞாயிறு நீங்கலாக) தினமும் காலை 9.30 மணி முதல் 5.30 மணி வரையும், **சுனாமி கட்டிடம், கால்நடை பன்முக மருத்துவமனை வளாகம், புதுக்கிராமம், தூத்துக்குடி** என்ற முகவரியில் நடைபெறவுள்ளது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த முகவரிக்கு நேர்காணலில் கலந்து கொள்வதற்கான நேர்முக அழைப்பாணை தனியே அஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதனில் குறிப்பிட்டுள்ள நாளில் அழைப்பாணை கடிதத்துடன் அனைத்து அசல் சான்றுகளுடன் நேர்காணலில் கலந்து கொள்ள விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்களுக்கு நேர்முக அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறவில்லை என்றால் அவர்கள் தகுந்த விண்ணப்பம் செய்த ஆதாரங்களுடன் தூத்துக்குடி, கால்நடை பராமரிப்புத்துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தை நேரில் 30.04.2022-க்குள் அணுகிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நேர்முக அழைப்பாணை இல்லாதவர்கள் நேர்முகத் தேர்வு வளாகத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.